KANCHIPURAM DISTRICT

K

# இரண்டாம் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2018

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

*நேரம்: 1.15 மணி*

## கணக்குப்பதிவியல்

*மதிப்பெண்கள்: 45*

### பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 10 x 1 = 10

1. கூட்டாண்மையில் ஒப்பந்தம் ________.
   a) கட்டாயமானது b) கட்டாயமில்லை
   c) விருப்பத்திற்குட்பட்டது d) தேவையில்லாதது
2. முதல் மீதான வட்டி கணக்கிடப்படுவது ________.
   a) தொடக்க முதல் b) இறுதி முதல் c) சராசரி முதல் d) கூடுதல் முதல்
3. கூட்டாளிகளின் நடப்புக் கணக்குகள் தொடங்கப்படுவது ________.
   a) நிலை முதல் முறையில் b) மாறுபடும் முதல் முறையில்
   c) சராசரி கால முறையில் d) நிலை முதல் முறையிலோ அல்லது மாறுபடும் முதல் முறையிலோ
4. உடன்பாடு இல்லாத நிலையில் இலாப நட்டம் பகிரப்படுவது ________.
   a) முதல் விகிதத்தில் b) ஒவ்வொரு கூட்டாளியும் செலவிட்ட நேர விகிதத்தின் அடிப்படையில்
   c) சமமாக d) திறமையின் அடிப்படையில்
5. நற்பெயர் ஒரு ________.
   a) நடப்பு சொத்து b) புலனாகும் சொத்து
   c) புலனாகாச் சொத்து d) கற்பனைச் சொத்து
6. சாதாரண இலாபத்தை விட கூடுதலாகப் பெறக்கூடிய சராசரி இலாபம் ________ எனப்படும்.
   a) நற்பெயர் b) சராசரி இலாபம் c) உயர் இலாபம் d) நிகர இலாபம்
7. சேர்க்கையில் மறுமதிப்பீட்டின் இலாபத்தை பழைய கூட்டாளிகளின் முதல் கணக்குகளில் மாற்றப்படுவது
   a) பழைய இலாபப் பகிர்வு விகிதத்தில் b) தியாக விகிதத்தில்
   c) ஆதாய விகிதத்தில் d) புதிய இலாபப் பகிர்வு விகிதத்தில்
8. புதிய கூட்டாளி சேர்க்கையில், பகிர்ந்து தரா இலாபமும், காப்பு நிதியும் பகிர்ந்து கொள்ளப்படுவது
   a) புதிய இலாப பகிர்வு விகிதம் b) பழைய இலாப பகிர்வு விகிதம்
   c) முதல் விகிதம் d) தியாக விகிதம்
9. கூட்டாண்மை நிறுவனத்தில் சேர்க்கப்படும் ஒரு கூட்டாளி எவ்வாறு அழைக்கப்படுகிறார்?
   a) உரிமையாளர் b) உள்வரும் கூட்டாளி
   c) விலகும் கூட்டாளி d) நிறுவனர்
10. மறுமதிப்பீட்டில் ஒரு சொத்தின் மதிப்பு அதிகரித்தல் ________ இனமாக கருதப்படும்.
    a) இலாபம் b) நட்ட c) செலவினம் d) இவற்றில் ஏதுமில்லை

### பகுதி - ஆ

II. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி: *(வினா எண். 11 கட்டாய வினா)* 4 x 2 = 8

11. நற்பெயர் என்றால் என்ன?
12. உயர் இலாபம் என்றால் என்ன?
13. இலாப நட்டப் பகிர்வுக் கணக்கு என்றால் என்ன?
14. ராஜா, ரோஜா எனும் இரு கூட்டாளிகள் சமமாக இலாப நட்டங்களைப் பகிர்ந்து வருகின்றனர். ராஜா ஒவ்வொரு மாத இறுதியிலும் ரூ.200 தொடர்ந்து எடுத்துக் கொள்கிறார். ராஜா எடுப்பு மீதான வட்டி 10% கணக்கிடுக.

Scanned by CamScanner

15. உள்வரு கூட்டாளி என்பவர் யார்?

16. மறு மதிப்பீட்டுக் கணக்கு ஏன் தொடங்குகிறோம்?

17. சாரதா, சந்தியா என்ற கூட்டாளிகள் முறையே 4:3 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். சோபியா என்பவரை இலாபத்தில் 1/5 என்ற பங்கில் கூட்டுக்கு சேர்த்தனர். புதிய இலாப பகிர்வு விகிதம் கணக்கிடுக.

பகுதி - இ

**III. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 18 கட்டாய வினா)* 4 x 3 = 12

18. நற்பெயர் மதிப்பிடுதல் : நிறுவனத்தின் நற்பெயர் கடந்த ஐந்து ஆண்டு சராசரி இலாபத்தின் மூன்று ஆண்டு கொள்முதல் என்று மதிப்பிடப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள்:

| | | |
|---|---|---|
| 2000 | ரூ. | 4,200 |
| 2001 | ரூ. | 4,500 |
| 2002 | ரூ. | 4,700 |
| 2003 | ரூ. | 4,600 |
| 2004 | ரூ. | 5,000 |

19. ரவி, ரகு என்ற இரு கூட்டாளிகள் முறையே ரூ.90,000, ரூ.70,000 முதல் வைத்து ஏப்ரல் 1, 2003 அன்று தொழில் தொடங்கினர். ரவி மேலும் ரூ.10,000 கூடுதல் முதல் ஜூலை 1, 2003 அன்று கொண்டு வந்தார். முதல் மீது வட்டி 10% அனுமதிக்கப்படுகிறது. 2004, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய ரவி மற்றும் ரகு ஆகியோரின் முதல் மீதான வட்டியைக் கணக்கிடுக.

20. நற்பெயரைப் பாதிக்கும் காரணிகள் யாவை? (ஏதேனும் 3)

21. நற்பெயர் மதிப்பிடும் முறைகளை எழுதி அவற்றில் ஏதேனும் ஒன்றினை விளக்குக.

22. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு அபிநயா, அட்சயா எனும் கூட்டாளிகளின் முதல் கணக்கு மற்றும் நடப்புக் கணக்குகளை நிலை முதல் முறையில் தயார் செய்க.

| | *அபிநயா ரூ.* | *அட்சயா ரூ.* |
|---|---|---|
| 1.4.2010 அன்று முதல் | 90,000 | 70,000 |
| 2010-2011 ஆம் ஆண்டில் எடுப்பு | 12,000 | 9,000 |
| எடுப்பு மீது வட்டி | 400 | 300 |
| முதல் மீது வட்டி | 5,400 | 4,200 |
| ஊதியம் | 12,000 | --- |
| கழிவு | --- | 6,000 |
| 2010-2011 ஆம் ஆண்டின் இலாபப்பங்கு | 6,000 | 4,000 |

23. கூட்டாளி சேர்ப்பின் பொழுது செய்யப்படும் சரிக்கட்டுதல்கள் யாவை?

24. இராமன், இலட்சுமணன் என்ற கூட்டாளிகள் முறையே 4:3 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். வேலன் என்பவரைச் சேர்க்க முடிவு செய்த பிறகு பின்வருமாறு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை மறுமதிப்பீடு செய்தனர்.

(a) கட்டட மதிப்பை ரூ.60,000 அதிகப்படுத்த வேண்டும்.

(b) ஐயக்கடன் ஒதுக்கு ரூ.800 குறைக்க வேண்டும்.

(c) இயந்திர மதிப்பை ரூ.16,000, அறைகலன் ரூ.4,000 மற்றும் சரக்கிருப்பு ரூ.12,000 குறைக்க வேண்டும்.

(d) கொடுபடாமலுள்ள பொறுப்புகளுக்கு ரூ.800 க்கு வகை செய்ய வேண்டும்.

மறுமதிப்பீட்டுக் கணக்கைத் தயாரிக்கவும்.

Scanned by CamScanner

பகுதி – ஈ

3 x 5 = 15

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:**

25. இராமு, சோமு என்போர் மாறுபடும் முதல் கொண்ட கூட்டாளிகளாக இருக்கும் பொழுது கீழ்க்காணும் விவரங்கள் அவர்களின் முதல் கணக்குகளில் எவ்வாறு தோன்றும்?

| | இராமு ரூ. | சோமு ரூ. |
|---|---|---|
| 1.4.2004 அன்றைய முதல் | 90,000 | 60,000 |
| 2004-2005 ஆம் ஆண்டில் எடுப்புகள் | 18,000 | 15,000 |
| எடுப்பு மீதான வட்டி | 500 | 300 |
| 2004-2005 ஆண்டின் இலாபப் பங்கு | 12,000 | 8,000 |
| முதல் மீதான வட்டி | 5,400 | 3,500 |
| கூட்டாளியின் ஊதியம் | 6,000 | ---- |

*(அல்லது)*

2004 ஏப்ரல் 1 ஆம் நாள் இளவரசன், அமுதரசன் என்னும் இருவர் முறையே ரூ.1,50,000, ரூ.1,00,000 முதலிட்டு சமமான விகிதத்தில் இலாபத்தைப் பகிர்ந்து கொள்ள உடன்பட்டு கூட்டாண்மை நிறுவனம் அமைத்தனர். சரிக்கட்டுகளுக்கு முன் அந்நிறுவனத்தின் 2005 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் இலாபம் ரூ.60,000 முதல் மீது வட்டி 6% அளிக்கப்படும். அமுதரசனுக்கு ஆண்டு ஊதியம் ரூ.15,000 அனுமதிக்கப்படுகிறது. அந்த ஆண்டு இளவரசன் எடுத்த தொகை ரூ.15,000, அமுதரசன் எடுத்த தொகை ரூ.10,000; அதற்கான வட்டி முறையே ரூ.500, ரூ.250 ஆகும். 2005 மார்ச் 31 அன்று உள்ளபடி கூட்டாளிகளின் இலாப நட்டப் பகிர்வு கணக்கையும், முதல் கணக்குகளையும் தயாரிக்க.

26. நாராயணன், பெருமாள் என்ற கூட்டாளிகள் சமமாக இலாப நட்டம் பகிர்ந்து வருகின்றனர். அவர்களுடைய 2005 ஏப்ரல் 1 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | | ரூ. | சொத்துகள் | | ரூ. |
|---|---|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | | 24,000 | கையிருப்பு ரொக்கம் | | 2,000 |
| <u>முதல் கணக்குகள்:</u> | | | வங்கியிருப்பு ரொக்கம் | | 19,000 |
| நாராயணன் : | 60,000 | | பற்பல கடனாளிகள் | 12,000 | |
| பெருமாள் : | 60,000 | 1,20,000 | கழிக்க : ஐயக்கடன் ஒதுக்கு | 1,000 | 11,000 |
| | | | சரக்கிருப்பு | | 24,000 |
| | | | அறைகலன் | | 8,000 |
| | | | கட்டடம் | | 80,000 |
| | | 1,44,000 | | | 1,44,000 |

அவர்கள் பின்வரும் பகிர்வுகளில் பழனி என்பவரைக் கூட்டாண்மையில் சேர்த்துக் கொண்டனர்.

(a) சரக்கிருப்பு மற்றும் அறைகலன் ஆகியவற்றில் 10% தேய்மானம் நீக்குவது

(b) கட்டடத்தின் மதிப்பை ரூ.15,000 உயர்த்துவது

(c) ஐயக்கடன் ஒதுக்கு ரூ.1,500 ஆக அதிகரிப்பது.

மறு மதிப்பீட்டுக் கணக்கு, முதல் கணக்குகள் மற்றும் சரிக்கட்டுகளுக்குப் பின் இருப்புநிலைக் குறிப்பு ஆகியவற்றைத் தயார் செய்க.

*(அல்லது)*

Scanned by CamScanner

அமுதா, ரமா என்ற கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். 31.3.2005 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | | | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | | | 80,000 | வங்கி | 10,000 |
| செலுத்தற்குரிய மா.சீட்டுகள் | | | 20,000 | பற்பல கடனாளிகள் | 30,000 |
| முதல் கணக்குகள்: | | | | இயந்திரம் | 40,000 |
| அமுதா | : | 40,000 | | நிலமும் கட்டடமும் | 70,000 |
| ரமா | : | 30,000 | 70,000 | சரக்கிருப்பு | 20,000 |
| | | | 1,70,000 | | 1,70,000 |

1.4.2005 அன்று லதா என்பவரை பின்வரும் பகிர்வுகளுக்குட்பட்டு சேர்த்துக்கொள்ள முடிவு செய்தனர்.

(a) லதா ரூ.30,000 முதல் கொண்டு வருவது.

(b) ஏடுகளில் நற்பெயர் ரூ.20,000 என தோற்றுவிப்பது.

(c) நிலம்-கட்டடத்தை 10% மதிப்பேற்றம் செய்வது.

(d) சரக்கிருப்பை ரூ.3,000 குறைப்பது.

(e) கொடுபடாப் பொறுப்பு ரூ.2,000 உருவாக்குவது.

மறுமதிப்பீட்டுக் கணக்கு, முதல் கணக்குகள், புதிய கூட்டாண்மையின் இருப்புநிலைக்குறிப்பு ஆகியவற்றைத் தயாரிக்கவும்.

27. பின்வரும் செய்திகளைக் கொண்டு உயர் இலாபத்தில் இரண்டு ஆண்டு கொள்முதல் எனக்கொண்டு நற்பெயரில் மதிப்பைக் கணக்கிடுக.

(a) தொழிலில் பயன்படுத்தப்பட்ட சராசரி முதல் ரூ.6,00,000

(b) கடந்த நான்கு ஆண்டுகளில் நிறுவனத்தின் நிகர இலாபங்கள் ரூ.5,00,000, ரூ.12,00,000, ரூ.16,00,000 மற்றும் ரூ.17,00,000 ஆகும்.

(c) முதல் மீது எதிர்பார்க்கும் வட்டி 10%

*(அல்லது)*

நிலை முதல் முறைக்கும், மாறுபடும் முதல் முறைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

******

Scanned by CamScanner